©
தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
*[விலை ரு. 3.20 பைசா*

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது

எண். 274] சென்னை, செவ்வாய், ஆகஸ்ட் 22, 2017

ஆவணி 6, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II – பிரிவு 2

## தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட பொதுமக்களில் ஒரு பிரிவினரின் நலனுக்கான அறிவிக்கைகள் அல்லது ஆணைகள்

## அரசின் அறிவிக்கைகள்

**வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–ன் கீழ் அறிவிக்கைகள்

**அறிவிக்கைகளுக்கு திருத்தங்கள்**

*[அ.ஆ.நிலை எண். 94 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1), 22 ஆகஸ்ட் 2017,*

*ஆவணி 6, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/ வவப /668(ஈ-1)/2017.**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 –ன் (தமிழ்நாடு சட்டம் 2017–ன் 19–ல்) பிரிவு 9–ன் உட்பிரிவு (1), பிரிவு–11–ன் உட்பிரிவு (5), பிரிவு–15ன் உட்பிரிவு (1) மற்றும் பிரிவு–16ன் உட்பிரிவு (1)–ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி தமிழ்நாடு ஆளுநரால், குழுவின்பரிந்துரைகளின் படி, அவ்வாறு செய்வது பொதுமக்களின் நலனுக்கு அவசியம் என மனநிறைவடைந்து , 2017 ஜுன் 29–ந் தேதியிட்ட தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணத்தின் பிரிவு 2, பகுதி–II பக்கங்கள் 85 முதல் 119 –ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண், II (2)/வவப/532 (ஈ–14)–க்கு, பின்தொடரும் திருத்தங்கள் செய்யப்படுகிறது. அதாவது:–

### திருத்தங்கள்

கூறப்பட்ட அறிவிக்கையில், அட்டவணையில்:–

(i) வரிசை எண் 3க்கு எதிராக, நிரல் (3)–ல் இனம் (iii) மற்றும் நிரல் (3), (4) மற்றும் (5) அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு, பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும். அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| ‘‘(iii) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017, பிரிவு–2ன் கூறு (119)–ல் விளக்கப்பட்ட ஒப்பந்த வேலையிக்கான பலசேர்ந்தமைந்த வழங்கல், அரசாங்கத்திற்கு, உள்ளாட்சி அமைப்புக்கு, அல்லது அரசாங்க நிறுவனத்திற்கு கட்டுமானப் பணி, நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல், அமர்த்துதல், நிறைவுசெய்தல், பொறுத்துதல், பழுது பார்த்தல், பராமரித்தல், சீரமைத்தல் அல்லது மாற்றியமைப்பதற்காக வழங்கப்பட்டது:–<br><br>(அ) பழங்கால சின்னங்கள் மற்றும் தொல்பொருள் தளங்கள் மற்றும் மிகுதிகள் சட்டம், 1958 (மத்திய சட்டம் 1958–ன் 24–ல்) ன் கீழ் தொன்மையாக குறிப்பிடப்பட்ட வரலாற்று நினைவுசின்னம், தொல்பொருள் தளம் அல்லது தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவைகளின் எச்சங்கள், தொல்பொருள் அகழ்வாய்வு அல்லது தொன்மையானவை;<br>(ஆ) கால்வாய், அணை மற்றும் இதர நீர் பாசன வேலைகள்<br><br>(இ) குழாய்தொடரமைப்பு, குழாய்கால்வாய் அல்லது (i) தண்ணீர் வழங்குவதற்கான, அல்லது (ii) தண்ணீர் சுத்திகரித்தலுக்கான அல்லது (iii) கழிவுநீர் சுத்திகரித்தல் அல்லது அகற்றுவதற்கான இயந்திர நிலையம். | 6 | – |
| (iv) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017, பிரிவு–2ன் கூறு (119)–ல் விளக்கப்பட்ட ஒப்பந்த வேலையின் பலசேர்ந்தமைந்த வழங்கல், அரசாங்கத்திற்கு, உள்ளாட்சி அமைப்புக்கு, அல்லது அரசாங்க நிறுவனத்திற்கு கட்டுமானப் பணி, நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல், அமர்த்துதல், நிறைவுசெய்தல், பொறுத்துதல், பழுது பார்த்தல், பராமரித்தல், சீரமைத்தல் அல்லது மாற்றியமைப்பதற்காக வழங்கப்பட்டது:–<br><br>(அ) பொது மக்கள் பயன்பாட்டிற்கான சாலை, பாலம், சுரங்கவழி அல்லது சாலை போக்குவரத்து முனையம்;<br>(ஆ) குடிமுறை கட்டமைப்பு அல்லது ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புதுப்பித்தல் திட்டம் அல்லது ராஜிவ் ஆவாஸ் யோஜ்னா திட்டம் தொடர்பான மூல வேலைகள்<br><br>(இ) அனைவருக்கும் வீட்டு வசதி (நகரம் ) அல்லது பிரதம மந்திரி ஆவாஸ் யோஜ்னா திட்டத்தின் கீழ் ஏற்கெனவே குடிசையில் குடியிருப்பவர்களுக்கு மட்டும் ‘‘தனியாளர் பங்கேற்பு’’ மூலம் நிலத்தை வாய்ப்புவளமாக கொண்டு ஏற்கெனவே குடிசையில் குடியிருப்பவர்களுக்கு உள்ளூராட்சி மறுவாழ்வு தொடர்பான குடிமுறை கட்டமைப்பு அல்லது வேறு ஏதேனும் மூல வேலைகள்.<br><br>(ஈ)அனைவருக்கும் வீட்டு வசதி (நகரம் ) திட்டம் அல்லது பிரதம மந்திரி ஆவாஸ் யோஜ்னா திட்டத்தின் கீழ் “ பயனாளிகளின் தலைமையிலான வீட்டு கட்டுமானம் / உயர்த்துதல்’’ தொடர்பான மூல வேலைகள் அல்லது குடிமுறை கட்டமைப்பு. | 6 | – |

| | | |
|---|---|---|
| (உ) தொழிற்சாலையில் ஒரு பகுதியாக அமையாத மாசு கட்டுபாடு அல்லது தொழிலக நீர்மகழிவுகளை சுத்திகரித்தலுக்கான இயந்திரநிலையம்.<br><br>(ஊ) இறந்தவர்களை அடக்கம் அல்லது எரியூட்டுவதற்கான ஈமச்சடங்கிற்கான கட்டமைப்பு. | | |
| (v) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017, பிரிவு–2ன் கூறு (119)–ல் விளக்கப்பட்ட ஒப்பந்த வேலையின் பலசேர்ந்தமைந்த வழங்கல் மூலமாக கட்டுமானப் பணி, நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் அல்லது அமர்த்துதல் மூல வேலைகள் தொடர்புடையதான:–<br><br>(அ) இருப்புப்பாதை, மோனோ ரயில் மற்றும் மெட்ரோ தவிர;<br><br>(ஆ) குடியிருப்பு வளாகத்தின் பகுதியாக இல்லாத ஒரு தனி குடியிருப்பு அலகு;<br><br>(இ) இந்திய அரசின், வீட்டு வசதி அமைச்சகம் மற்றும் நகர்ப்புற வறுமைத் துயர்தணிப்பு திட்டதில் ஏற்படுத்தப்பட்ட “ இயலக்கூடிய வீட்டு வசதி கூட்டாண்மை திட்டத்தின்” கீழ் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு தகுதியான அலுவலரால் ஒப்புதல் வழங்கப்பட்ட வீட்டு வசதித் திட்டத்தில் ஒவ்வொரு வீடும் 60 சதுர மீட்டர் கட்டட உட்பரப்பு கொண்ட குறைந்த விலை வீடுகள்;<br><br>(ஈ)தகுதிவாய்ந்த அலுவலரால் ஒப்புதல் வழங்கப்பட்ட வீட்டுவசதி திட்டத்தின் கீழ், வீடு ஒவ்வொன்றும் 60 சதுர மீட்டர் கட்டட உட்பரப்பு கொண்ட குறைந்த விலை வீடுகள்.<br><br>(1) பிரதம மந்திரி ஆவாஸ் யோஜ்னா /அனைவருக்கும் வீட்டுவசதி (நகர்புற) திட்டத்தின் கூறாக உள்ள “ இயலக்கூடிய வீட்டுவசதி கூட்டாண்மை ”<br>(2) மாநில அரசின் ஏதாவது ஒரு வீட்டு வசதி திட்டம்<br><br>(உ) அத்தகைய நோக்கத்திற்கான அறுவடைக்கு பின்பு விவசாய விளைப்பொருட்களை பாதுகாக்கும் உள்கட்டமைப்பு குளிர்பதன கிடங்கு உட்பட; அல்லது<br><br>(ஊ) உணவு தானியங்களை இயந்திரமயமாக கையாளும் அமைப்பு அல்லது மதுபானங்கள் தவிர, விவசாய விளைப்பொருட்களை உணவு பொருளாக பதனம் செய்யும் அலகிற்கான இயந்திரத்தொகுதி அல்லது தளவாடம். | 6 | – |
| (vi) மேலே உள்ள (i) (ii) (iii) (iv) மற்றும் (v) தவிர்த்த கட்டுமான சேவைகள். | 9 | –” |

(ii) வரிசை எண் 8 க்கு எதிராக, நிரல் (3) –இல் இனம் (vi)-ல் மற்றும் நிரல் (3), (4) மற்றும் (5)–இல் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு, பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| "(vi) மோட்டார் வாகனத்தில் பயணிகள் போக்குவரத்தின் போது சேவையை பெறுபவரிடமிருந்து பெறப்படும் மறுபயன் கட்டணத்தில், எரிபொருளின் செலவீனத்தையும் உள்ளடக்க வேண்டும். | 2.5 | இருப்பினும் சேவை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகளின் மீதான உள்ளீட்டு வரி வரவு எடுக்கப்படவில்லை.<br>[விளக்கம் எண் (iv) ஐ தயவுசெய்து பார்க்கவும்] |
| | அல்லது | |
| | 6 | –" |

(iii) வரிசை எண் 9 க்கு எதிராக, நிரல் (3) –இல் இனம் (iii)-ல் மற்றும் நிரல் (3), (4) மற்றும் (5)–இல் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு, பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| "(iii) சரக்குகளின் போக்குவரத்து தொடர்புடைய சரக்குகள் போக்குவரத்து நிறுவனத்தின் (GTA) சேவைகள் (சொந்த பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்ட வீட்டு உபயோகப் பொருட்கள் உட்பட) .<br><br>விளக்கம்–"சரக்குகள் போக்குவரத்து நிறுவனம்" என்பதற்கு அனுப்புச்சரக்கு குறிப்பு வழங்கும் மற்றும் சாலை மூலமாக சரக்குகள் போக்குவரத்து தொடர்பான சேவையை வழங்கும் எந்த ஒரு நபரும், எந்த பெயரால் அழைக்கப்பட்டாலும். | 2.5 | இருப்பினும் சேவை வழங்குவதற்கான உபயோகிக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகளின் மீதான உள்ளீட்டு வரி வரவு எடுக்கப்படவில்லை.<br>[விளக்கம் எண் (iv) ஐ தயவுசெய்து பார்க்கவும்] |
| | அல்லது | |
| | 6 | இருப்பினும் சரக்கு போக்குவரத்து நிறுவனமானது 6% மாநிலவரி செலுத்த இந்த பதிவின் கீழ் விருப்பம் தெரிவித்திருந்தால், இனிமேல், சரக்கு போக்குவரத்து நிறுவனத்தால் (GTA) வழங்கப்படும் அனைத்து சேவைகளுக்கும் 6% மாநில வரி செலுத்த பொறுப்புடையவராகிறார்." |

(iv) வரிசை எண் 10 க்கு எதிராக, நிரல் (3) –இல் இனம் (i)-ல் மற்றும் நிரல் (3), (4) மற்றும் (5)–இல் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு, பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| "(i) மோட்டார் வாகனத்தை வாடகைக்கு விடும் போது சேவையை பெறுபவரிடமிருந்து பெறப்படும் மறுபயன் கட்டணத்தில், எரிபொருளின் செலவீனத்தையும் உள்ளடக்க வேண்டும். | 2.5 | இருப்பினும் சேவை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகளின் மீதான உள்ளீட்டு வரி வரவு எடுக்கப்படவில்லை.<br>[விளக்கம் எண் (iv) ஐ தயவுசெய்து பார்க்கவும்] |
| | அல்லது | |
| | 6 | –" |

(v) வரிசை எண் 11 க்கு எதிராக நிரல் (3) –இல் இனம் (iii)-ல் மற்றும் நிரல் (3), (4) மற்றும் (5)–இல் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு, பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| "(i) சரக்குகளின் போக்குவரத்து தொடர்புடைய சரக்குகள் போக்குவரத்து நிறுவனத்தின் (GTA) சேவைகள் (சொந்த பயன்பாட்டிற்கான பயன்படுத்தப்பட்ட வீட்டு உபயோக பொருட்கள் உட்பட) . | 2.5 | இருப்பினும் சேவை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகளின் மீதான உள்ளீட்டு வரி வரவு எடுக்கப்படவில்லை. [விளக்கம் எண் (iv) ஐ தயவுசெய்து பார்க்கவும்] |
| | அல்லது | |
| விளக்கம்–"சரக்குகள் போக்குவரத்து நிறுவனம்'' என்பதற்கு அனுப்புச்சரக்கு குறிப்பு வழங்கும் மற்றும் சாலை மூலமாக சரக்குகள் போக்குவரத்து தொடர்பான சேவையை வழங்கும் எந்த ஒரு நபரும், எந்த பெயரால் அழைக்கப்பட்டாலும். | 6 | இருப்பினும் சரக்கு போக்குவரத்து நிறுவனமானது 6% மாநிலவரி செலுத்த இந்த பதிவின் கீழ் விருப்பம் தெரிவித்திருந்தால், இனிமேல், சரக்கு போக்குவரத்து நிறுவனத்தால் (GTA) வழங்கப்படும் அனைத்து சேவைகளுக்கும் 6% மாநில வரி செலுத்த பொறுப்புடையவராகிறார்.'' |

(vi) வரிசை எண் 26 க்கு எதிராக:–

(அ) நிரல் (3)–இல் , இனம் (i)இல் :–

(அ) உள்– இனம் (ஆ)–க்கு பின்தொடரும் உள்–இனம் மாற்றீடு செய்யப் படுகிறது அதாவது:–

''(ஆ) சுங்கவரி கட்டணவீதப் பட்டியல் சட்டம், 1975 (மத்திய சட்டம் 1975–ன்51–ல்) முதல் அட்டவணை அத்தியாயம் 50 முதல் 63 இன் கீழ் வருகிற துணிகள் மற்றும் துணிப் பொருட்கள் ''

(ஆ) இந்த விளக்கமானது விட்டுவிடப்பட வேண்டும்

(ஆ) நிரல் (3) –இல் இனம் (ii)-மற்றும் நிரல் (3), (4) மற்றும் (5)–இல் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு, பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| "(ii) இன்னொருவருக்கு சொந்தமான சரக்குகளை ஏதேனும் வகையில் சுத்தப்படுத்துதல் அல்லது செய்முறை போன்ற சேவைகள் தொடர்புடைய–<br>(அ) செய்திதாள்களை அச்சிடுதல்;<br>(ஆ) புத்தகங்கள் (பிரெய்லி புத்தகம் உட்பட) பத்திரிகைகள் மற்றும் பருவ வெளியீடுகள் அச்சிடுதல் | 2.5 | – |
| (iii) மேலே உள்ள (i) மற்றும் (ii) தவிர பிறருக்கு சொந்தமான இயற்பொருள் உள்ளீடுகள் மீது (சரக்குகள்) தயாரிக்கும் சேவைகள். | 9 | –'' |

(vii) வரிசை எண் 27 மற்றும் தொடர்புடைய பதிவுகளுக்கு, பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:—

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| "27 | **தலைப்பு 9989** | (i) செய்திதாள்கள், புத்தகங்கள் (பிரெய்லி புத்தகம் உட்பட) பத்திரிகைகள் மற்றும் பருவ வெளியீடுகள் அச்சிடுவதற்கு பதிப்பாளரால் உள்ளடக்கம் மட்டுமே வழங்கப்பட்டு மேலும் அச்சிடுவதற்கு உபயோகப்படும் காகிதம் உட்பட்ட உள்ளீட்டு இயற்பொருட்கள் அச்சிடுபவருக்கு உரியதாகி வழங்கப்படும் சேவைகள். | 6 | — |
| | | (ii) மேலே உள்ள (i) தவிர, இதர தயாரிப்பு சேவைகள்; வெளியீடுகள், அச்சிடுதல் மற்றும் மறுஆக்க சேவைகள்; பொருட்கள் மீளப்பெறும் சேவைகள் | 9 | —" |

(viii) வரிசை எண் 34 க்கு நிரல் (3) இனம் (i) க்கு எதிராக, "நாடகம்" என்ற வார்த்தைக்கு பிறகு "அல்லது கோளரங்கம் " என்ற வார்த்தை இடை சேர்க்கப்படுகிறது.

2. 2017, ஆகஸ்டு 22—ம் நாள் முதல் இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வருகிறது.

*[அ.ஆ.நிலை எண். 95 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1), 22 ஆகஸ்ட் 2017,*

*ஆவணி 6, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/ வவப /668(ஈ-2)/2017.**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ன் 19ல்)—ன் பிரிவு—11 உட்பிரிவு 1—ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, அவ்வாறு செய்வது பொதுமக்களின் நலனுக்காக என மனநிறைவுடைந்து, குழுவின் பரிந்துரையின் படி, தமிழ்நாடு ஆளுநரால், 2017, ஜுன் 29ந் தேதியிட்ட தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணத்தின் பிரிவு—2, பகுதி—II, பக்க எண். 119 முதல் 143—ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண். II (2)/ வவப/532 (ஈ—15) 2017க்கு, பின்தொடரும் திருத்தங்கள் செய்யப்படுகிறது, அதாவது:—

<u>**திருத்தங்கள்**</u>

கூறப்பட்ட அறிவிக்கையில்,—

(i) அட்டவணையில்,—

(a) வரிசை எண் 9க்கு மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின் தொடர்பவை இடை சேர்க்கப்பட வேண்டும், அதாவது: —

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| "9A | அத்தியாயம் 99 | இந்தியாவில் நடைபெறவிருக்கும் FIFA U-17 உலகக் கோப்பை 2017 இன் கீழ், நடைபெறவிருக்கும் எந்த ஒரு நிகழ்ச்சிகளுக்கும், உலக கால்பந்து கழகத்தால் (FIFA) மற்றும் அதன் தொடர்புடைய துணை நிறுவனங்களால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்கப்படும் சேவைகள். | இல்லை | இருப்பினும் FIFA U-17 உலகக் கோப்பை 2017'' இன் கீழ் நிகழ்ந்த எந்தவொரு நிகழ்வுகளுக்கும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புள்ளதாக இயக்குனர் (விளையாட்டு), இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் சான்றளிக்கிறது." |

(b) வரிசை எண் 11 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு, பின் தொடர்பவை இடை சேர்க்கப்பட வேண்டும், அதாவது: –

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| "*11அ* | தலைப்பு 9961 அல்லது தலைப்பு 9962 | விளிம்பு அல்லது தரகு வடிவில் மறுபயனுக்கெதிராக பொதுவினியோக திட்டத்தின்(PDS) கீழ் கோதுமை, அரிசி மற்றும் சொரசொரப்பான தானியங்களை நியாய விலைக் கடைகளால் விற்பனை செய்வதன் மூலமாக மத்திய அரசுக்கு வழங்கப்படும் சேவை. | இல்லை | இல்லை |
| *11ஆ* | தலைப்பு 9961 அல்லது தலைப்பு 9962 | விளிம்பு அல்லது தரகு வடிவில் மறுபயனுக்கெதிராக பொதுவினியோக திட்டத்தின் (PDS) கீழ் மண்ணெண்ணெய், சர்க்கரை, சமையல் எண்ணெய் இன்னபிறவற்றை நியாய விலைக் கடைகளால் விற்பனை செய்வதன் மூலமாக மாநில அரசுகளுக்கு அல்லது ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதிகளுக்கு வழங்கப்படும் சேவை. | இல்லை | இல்லை''; |

(c) வரிசை எண் 35க்கு எதிராக, நிரல்(3)ல்:–

(*அ*) இனம்(ஏ)ல் ''வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டுத் திட்டம் அல்லது மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்'' என்ற வார்த்தைகளுக்கு,''சீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டு திட்டம் (RWCIS)'' என்ற வார்த்தைகள் அடைப்புக்குறிகள் மற்றும் எழுத்துக்கள் மாற்றீடு செய்யப்பட வேண்டும்.

(*ஆ*) இனம் (ஒ)ல் ''தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் (Rashtriya Krishi Bima Yojana)'', என்ற வார்த்தைகள் மற்றும் அடைப்புக்குறிகளுக்காக ''பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா (PMFBY)'' என்ற வார்த்தைகள், அடைப்புக்குறிகள் மற்றும் எழுத்துக்கள் மாற்றீடு செய்யப்பட வேண்டும்.

(ii) பத்தி 3–ல், விளக்கத்தில் கூறு (ii)க்கு பிறகு, பின் தொடரும் கூறு இடை சேர்க்கப்பட வேண்டும், அதாவது;–

(iii) வரையறுக்கப்பட்ட பொறுப்புரிமை கூட்டாண்மை சட்டம், 2008–ன் (மத்திய சட்டம் 2009ன் 6ல்) கீழ் உருவாக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட ஒரு ''வரையறுக்கப்பட்ட பொறுப்புரிமை கூட்டாண்மை'' ஆனது கூட்டாண்மை நிறுவனம் அல்லது நிறுவனமாக கருதப்பட வேண்டும்,

2. 2017, ஆகஸ்டு 22ம் நாள் முதல் இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வருகிறது.

*[அ.ஆ.நிலை எண். 96 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) ,22 ஆகஸ்ட் 2017,*

*ஆவணி 6, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/ வவப /668(ஈ-3)/2017.**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–ன்(தமிழ்நாடு சட்டம் 2017ன் 19ல்) பிரிவின்–9–ன் உட்பிரிவு(5)ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரையின் படி, தமிழ்நாடு ஆளுநரால், 2017, ஜுன் 29–ந் தேதியிட்ட தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணத்தின், பிரிவு–2, பகுதி– IIல் பக்க எண். 143 முதல் 146–ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண். II (2)/ வவப/532 (ஈ–16)/2017–க்கு, பின்தொடரும் திருத்தம் செய்யப்படுகிறது, அதாவது:–

திருத்தங்கள்

கூறப்பட்ட அறிவிக்கையில்,–

(i) அட்டவணையில், வரிசை எண்–1க்கு எதிராக, நிரல் (2)ல், ''சரக்கு போக்குவரத்து நிறுவனம் (GTA)'' என்ற வார்த்தை மற்றும் அடைப்புக்குறிக்கு பிறகு'' 6% வீதத்தில் மாநில வரி செலுத்தாதவர்கள்'', என்ற வார்த்தைகள் மற்றும் இலக்கம் இடை சேர்க்கப்பட வேண்டும்.

(ii) விளக்கத்தில், கூறு (ஈ)க்குப் பிறகு, பின்தொடரும் கூறு இடை சேர்க்கப்பட வேண்டும், அதாவது: –

(உ) வரையறுக்கப்பட்ட பொறுப்புரிமை கூட்டாண்மை சட்டம், 2008–ன் (மத்திய சட்டம் 2009ன் 6ல்) கீழ் உருவாக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட ஒரு ''வரையறுக்கப்பட்ட பொறுப்புரிமை கூட்டாண்மை'' ஆனது கூட்டாண்மை நிறுவனம் அல்லது நிறுவனமாக கருதப்பட வேண்டும்,

2. 2017, ஆகஸ்டு 22–ம் நாள் முதல் இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வருகிறது.

*[அ.ஆ.நிலை எண். 97 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1), 22 ஆகஸ்ட் 2017,*

*ஆவணி 6, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண்.II(2)/ வவப /668(ஈ-4)/2017.**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–ன்(தமிழ்நாடு சட்டம் 2017ன் 19ல்) பிரிவின்–9–ன் உட்பிரிவு(5)ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரையின் படி, தமிழ்நாடு ஆளுநரால், 2017, ஜூன் 29–ந் தேதியிட்ட தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணத்தின், பிரிவு–2, பகுதி– IIல், பக்க எண். 147 முதல் 148–ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண். II (2)/ வவப/532 (டி–20)/2017–க்கு, பின்தொடரும் திருத்தம் செய்யப்படுகிறது. அதாவது:–

**திருத்தம்**

கூறப்பட்ட அறிவிக்கையில், முதல் பத்தியில், கூறு (ii) க்கு பிறகு, பின்தொடரும் கூறு, இடை சேர்க்கப் படவேண்டும்.

“(iii) தச்சு வேலை, குழாய் பொருத்தி செப்பனிடுதல், இன்னபிற வீட்டு பராமரிப்பு மூலமாக சேவைகள், மின்னனு வர்த்தக செயல்பாட்டாளர் மூலமாக அத்தகைய சேவை வழங்குபம் அந்த நபர் தவிர கூறப்பட்ட தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின், பிரிவு–22, உட்பிரிவு (1)–ன் கீழ் பதிவு பெறுவதற்கு பொறுப்புள்ளவராவர்.

2. 2017, ஆகஸ்டு 22–ம் நாள் முதல் இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வருகிறது.

எஸ் .கே பிரபாகர்
அரசின்முதன்மை செயலாளர் (முகூபொ).